

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.6.2025), திருப்பத்தூர் மாவட்டம், மண்டலவாடியில் நடைபெற்ற அரசு விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்களை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.6.2025) வேலூரில், மாவட்டக் கழக அவைத் தலைவரும், கழக தணிக்கை குழு உறுப்பினருமான தி.அ.முகமது சகி அவர்களின் சகோதரரும், வேலூர் முன்னாள் துணை மேயருமான தி.அ.முகமது சாதிக் அவர்கள் அண்மையில் மறைவெய்தியதையொட்டி அவரது இல்லத்திற்கு நேரில் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (26.6.2025) திருப்பத்தூர் விருந்தினர் இல்லத்தில், வாணியம்பாடி முஸ்லீம் கல்வி சங்கத்தின் தலைவர் அப்துல்லா பாஷா மற்றும் நிர்வாகிகள் சந்தித்தனர். உடன் நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் மா விவசாயிகளின் நலனைக் காத்திடும் வகையில், மாம்பழ விலை வீழ்ச்சியை ஈடுசெய்ய சந்தைத் தலையீட்டுத் திட்டத்தை (Market Intervention Scheme) செயல்படுத்திடகோரி ஒன்றிய வேளாண்மை – உழவர் நலன் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் சிவராஜ்சிங் சவுகான் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தை, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி நேற்று முன்தினம் (25.6.2025) புதுதில்லியில் ஒன்றிய வேளாண்மை உழவர் நலன் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கி, இப்பிரச்சினைக்கு விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இந்நிகழ்வின்போது, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி. என். சிவா, பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டி. மதியழகன், ஒசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஒய். பிரகாஷ், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச்செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் பா. முருகேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.



புதுதில்லியில் ஒன்றிய நுகர்வோர் பாதுகாப்பு, உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி அவர்களை நேற்று முன்தினம் (25.06.2025) தமிழ்நாடு அரசின் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி நேரில் சந்தித்து, ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய ரூபாய் 2670.64 கோடி நிலுவை நிதியை உடனடியாக வழங்கவும் நியாய விலைக் கடைகளில் எடைபோடும் இயந்திரத்தை கை விரல் ரேகை பதிவு செய்யும் கருவியுடன் இணைத்து பொருட்கள் வழங்குவதால் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஏற்படும் காலதாமதத்தை தவிற்கும் வகையில் நடவடிக்கை எடுத்திடவும், இணைப்பு முறையை அமல்படுத்திட 31.03.2026 வரை கால நீட்டிப்பு வழங்கவும், தமிழ்நாட்டிற்கு இந்திய உணவுக் கழகம் வழங்கும் அரிசியினை முழுவதுமாக புழுங்கல் அரிசியாக ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலத் தொகுப்பில் இருந்து வழங்கவும், தமிழ்நாட்டில் இருந்து 2024–25 காரிஃப் பருவக் கொள்முதல் அளவை 16 இலட்சம் டன்னிலிருந்து 19.24 லட்சம் டன்னாக உயர்த்திடவும், ஆகிய கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினார். இந்நிகழ்வின்போது நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி. என்.சிவா, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சத்ய பிரத சாகு, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த. மோகன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் பா. முருகேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.



தலைமைச் செயலகத்தில் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களை கொரிய குடியரசின் துணை தூதரகத் தலைவர் Mr.Changnyun Kim, தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்வது குறித்து கொரியா Exim Bank General Mr. Kisang Kim, Mr. Dae Hee Kim, (Director) and Mr. Sae Hwan, (Loan Officer) ஆகியோர் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்கள்.



தலைமைச் செயலகத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் அவர்களை நேற்று முன்தினம் 25.06.2025 புதியதாக பொறுப்பேற்கவிருக்கும் சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கா.பொற்கொடி மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

# பண்ருட்டி ஒன்றியத்தில் பாராட்டு விழா!

பண்ருட்டி, ஜுன் 27-

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் சார்பாக பண்ருட்டி ஒன்றியத்தில் பணி நிறைவு பெற்ற ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா ஒன்றிய தலைவர் இரா.சுரேஷ் தலைமையில் நடைபெற்றது. நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பணி நிறைவு பெற்ற ஆசிரியர்களுக்கு பாராட்டு மெடல் வழங்கி வாழ்த்தினார்.

மாநில பொதுச்செயலாளர் மன்றம் சண்முகநாதன், மாநிலத் தலைவர் பெ. இரா. இரவி, பண்ருட்டி தெற்கு ஒன்றிய கழக துணைச் செயலாளர் சுமதி நந்தகோபால் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சி.அருள்பிரகாசன் வரவேற்புரையாற்றினார். மாவட்ட அமைப்பாளர் ராஜேந்திரன், துணை அமைப்பாளர்கள் ம.குமார், செந்தில்குமார், மகளிரணி அமைப்பாளர் பத்மாவதி, ராஜாராம், பொருளாளர் த.ஜெகதீசன் நன்றி கூறினர்.



சென்னை, தியாகராய நகரில், தமிழ்நாடு அரசின் சார்பில், சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களின் 120வது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (26.06.2025) அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், ம.பொ.சி அவர்களின் குடும்பத்தினர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.